
தரம் - 12

# தமிழ்

தேர்ச்சி 2.0



# அறிவுடைமை

## திருக்குறள்-அரசியல்

Mr.J.Ranjithkumar
Bt/Bt/Eravur Tamil M.V,Batticaloa.

அறிவு பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் இவ்வதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

# அறிவுடைமை




கல்வி,கேள்விகளினால் உண்டான அறிவோடு உண்மையறிவு உடையவனாதல்.



* **அறிவுடைமை என்னும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக**

1) **இடைவெளியில் வரவேண்டிய பொருத்தமான சொற்களைக்கொண்டு குறட்பாக்களை பூரணப்படுத்துக ?**

(மெய்ப்பொருள், கருவி, அறிவு, இடத்தால், அறிவுடையார், அஞ்சாமை, அறிவுடையார் எல்லாம் உடையார், எண்பொருள், தழீஇயது, உலகம், அறிவிலார், அறிவார் தொழில், அதிர வருவதோர் நோய்,)

1.1 "அறிவுஅற்றம் காக்கும் ……………… செறுவார்க்கும் உள் அழிக்கலாகா அரண்."



1.2 "சென்ற ……………… செலவிடாது தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு."

(மெய்ப்பொருள், கருவி, அறிவு, இடத்தால், அறிவுடையார், அஞ்சாமை, அறிவுடையார் எல்லாம் உடையார், எண்பொருள், தழீஇயது, உலகம், அறிவிலார், அறிவார் தொழில், அதிர வருவதோர் நோய்,)

* 1.3 “எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
* ……………… காண்பது அறிவு”
* 1.4 “………………ஆகச்செலச்சொல்லித் தான்பிறர்வாய்
* நுண்பொருள் காண்ப தறிவு.”
* 1.5 “உலகம் ……………… ஒட்பம்: மலர்தலும்
* கூம்பலும் இல்லது அறிவு.”
* 1.6 “எவ்வ துஉறைவது ……………… உலகத்தோடு
* அவ்வது உறைவது ………………”



(மெய்ப்பொருள், கருவி, அறிவு, இடத்தால், அறிவுடையார், அஞ்சாமை, அறிவுடையார் எல்லாம் உடையார், எண்பொருள், தழீஇயது, உலகம், அறிவிலார், அறிவார் தொழில், அதிர வருவதோர் நோய்,)

1.7 "................. ஆவது அறிவார்: .................
அ. ̇.துஅறி கல்லா தவர்."

1.8 "அஞ்சுவது ................. பேதமை: அஞ்சுவது
அஞ்சல் ................."

1.9 "எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
................................"

1.10 "................................. அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"



## விடைகள்

1)

| | | | |
|---|---|---|---|
| 1.1 | கருவி | 1.6 | உலகம் , அறிவு |
| 1.2 | இடத்தால் | 1.7 | அறிவுடையார் ,அறிவிலார் |
| 1.3 | மெய்ப்பொருள் | 1.8 | அஞ்சாமை , தொழில் |
| 1.4 | எண்பொருள் | 1.9 | அதிர வருவதோர் நோய் |
| 1.5 | தழீஇயது | 1.10 | அறிவுடையார் எல்லாம் உடையார் |



## 2) பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

2.1 “அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்……” இங்கு அற்றம் என்பது?

* 1. அழிவு 2. நட்பு 3. பகை 4. உதவி

2.2 “சென்ற இடத்தால் செலவிடாது தீது ஒரீஇ……”. இங்கு ஒரீஇ என்பது?

* 1. தழுவுதல் 2. நீக்குதல்
* 3. கடைப்பிடித்தல் 4. செலுத்துதல்

2.3 “எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

* மெய்ப்பொருள்……..” இங்கு மெய் என்பது



1. இழிந்த பொருள் 2. கெடுதி
3. உடம்பு 4. உண்மை

2.4 “எண்பொருள் ஆகச்செலச்சொல்லி தான்பிறர்வாய்

* நுண்பொருள்......” இங்கு நுண்பொருள் என்பது

* 1. மெய்யில்லாப்பொருள் 2. நிலையான பொருள்
  3. நுட்பமான பொருள் 4. தவறான பொருள்

2.5 “உலகம் தழீஇயது ஒட்பம்:..........” இங்கு தழீஇயது என்பதன் எதிர்க்கருத்து

* 1. நட்பாக்கிக்கொள்ளல் 2. நீக்குதல்
  3. உறவாகுதல் 4. தழுவுதல்

2.6 “எவ்வதுஉறைவது உலகம்.........” இங்கு உறைவது என்பது



* 1. ஒழுகுவது 2. உறைதல்
  3. உரை 4. உறை

2.7 "அறிவுடையார் ஆவது அறிவார்:......" இங்கு அறிவுடையார் என்பதன் எதிர்க்கருத்து

1. அறிவுள்ளவர்
2. அரசன்
3. அறிவிலார்
4. ஆசிரியர்

2.8 "அஞ்சுவது அஞ்சாமை பேதமை:....." இங்கு அஞ்சுவது என்பது

1. பயப்படுதல்
2. அடித்தல்
3. உருகுதல்
4. வேண்டுதல்



2.9 "எதிரதாக் காக்கும் அறிவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்". இங்கு நோய் என்பது

1. பயம்
2. துன்பம்
3. தோற்று
4. இன்பம்

2.10 "அறிவுடையார் எல்லாம் உடையார்: அறிவிலார்
என்னுடைய......" இங்கு அறிவிலார் என்பது

1. அறிஞர்
2. அறிவுள்ளவர்
3. அறிகுறி
4. அறிவில்லாதவர்



* விடைகள்

2)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2.1 | (1) | அழிவு | 2.6 | (1) | ஒழுகுவது |
| 2.2 | (2) | நீக்குதல் | 2.7 | (3) | அறிவிலார் |
| 2.3 | (4) | உண்மை | 2.8 | (1) | பயப்படுதல் |
| 2.4 | (3) | நுட்பமான பொருள் | 2.9 | (2) | துன்பம் |
| 2.5 | (2) | நீக்குதல் | 2.10 | (4) | அறிவில்லாதவர் |



3) பொருத்தமான கூற்றினை தெரிவு செய்து அதன் இலக்கத்தினை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

3.1 அறிவுடைமை என்பது,

1) அறிவு பற்றியும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கூறுவது.
2) அரசன் பற்றியும் அவன் குற்றங்கள் பற்றியும் கூறுவது.
3) பெரியாரை துணையாக கொள்வது பற்றி கூறுவது.
4) அறிய வேண்டியதையும் கடைப்பிடிக்கவேண்டியதையும் கூறுவது. (.....)



3.2 அறிவுடைமையில் அறிவின் சிறப்பாக அமைவது,

1) அரசருக்கு அழிவை ஏற்படுத்துவதும் பகைவருக்கு காவலாக அமைவதும் அறிவுதான்.
2) பகைவருக்கு அழிவு வராமற் காப்பதும் அரசனால் அழிக்க முடியாத அரணாக இருப்பதும் அறிவுதான்.
3) அரசருக்கு அழிவு வராமற் காப்பதும் பகைவரால் அழிக்கமுடியாத அரணாக இருப்பதும் அறிவு தான்.
4) சிறிய குற்றத்தையும் பெரிதாக நினைப்பதும் தவிர்ப்பதும் பாதுகாப்பதும் அறிவுதான். (.....)



3.3 அறிவுடைமையில் அறிவின் இலக்கணமாக அமையாதது,

1) நன்மை, தீமைகளை ஆராய்ந்து நல்லவழி செல்லவைப்பது.
2) கேட்பவற்றுள் மெய்பொருள் காணவைப்பது.
3) தனது கருத்தினை எளிமையாக சொல்வதுடன் பிறரது நுட்பமான கருத்தின் பொருளை அறிவிப்பது.
4) உலகை வெறுக்க வைப்பதும் உலகத்தோடு பொருந்தி நடக்க வைப்பதும். (.....)



3.4 அறிவுடைமையில் அறிவுடையார் இலக்கணமாக அமைவது,

1) பின்னர் நடக்க இருப்பதை முன்னரே அறிவதும் அஞ்ச வேண்டியதற்கு அஞ்சி நடப்பதும்.
2) அரசருக்கு அழிவு வராமல் காப்பதும் பகைவரால் அழிக்க முடியாது இருப்பதும்.
3) அரசனின் அறம் அறிந்தவராகவும் துன்பம் நீக்குபவராகவும் இருத்தல்.



4) செல்வங்களுடனும் உலக புகழுடனும் இருத்தல் (.....)

* 3.5 அறிவுடைமையில் ஒன்பதாவது, பத்தாவது குறள்கள் கூறுவன,

1) அறிவின் சிறப்பும் அறிவின் இலக்கணமும்
2) அறிவின் இலக்கணமும் அறிவுடையார் இலக்கணமும்
3) அறிவுடையாருக்கு துன்பம் ஏற்படாமையும் அறிவுடையார் உடைமையும் இன்மையும்.
4) அறிவுடையார் இலக்கணமும் அறிவுடையார் இன்மையும்.

(…..)



* விடைகள்

3)

| | |
|---|---|
| 3.1 | (1) |
| 3.2 | (3) |
| 3.3 | (4) |
| 3.4 | (1) |
| 3.5 | (3) |



**4) பின்வருவன சரியாயின் சரி (சரி) என்றும் பிழையாயின் பிழை (பிழை) என்றும் எழுதுக.**

4.1 அறிவு என்பது இறுதி வாராமல் காக்கும் கருவியாகும். ( )

4.2 அறிவு என்பது பகைவரும் அழிக்கமுடியாத உள்ளரணும் ஆகும். ( )

4.3 அறிவு என்பது மனதை அது சென்ற புலத்தின் கண் செல்லவிடுவதாகும். ( )

4.4) அறிவு என்பது யாதொரு பொருளை யாவர் யாவர் சொல்லக் கேட்பினும் அப்பொருளின் மெய்யான பொருளை காண்பது அறிவு ( )



4.5 அறிவு என்பது பிறர் வாய்க் கேட்கும் சொற்களின் நுண்ணிய பொருளை காணவல்லது. ( )

4.6 அறிவு என்பது நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலும் கொண்டது. ( )

4.7 அறிவு என்பது உலகத்தை நட்பாக்குவது, உலகத்தோடு பொருந்தி நடக்கவைப்பது அறிவு. ( )

4.8 அறிவுடையார் என்போர் வரக்கடவதனை முன் அறிய வல்லவர். ( )

4.9 அறிவுடையரானவர் அஞ்சுவதற்கு அஞ்சாது தன் நெஞ்சம் நிமிர்த்தி நடப்பர். ( )

4.10 நடக்க இருப்பதை முன்னரே அறியக் கூடிய அறிவுடையவருக்கு எந்த துன்பமும் ஏற்படாது. ( )



# விடைகள்

* 4)

4.1 (சரி)

4.2 (சரி)

4.3 (பிழை)

4.4 (சரி)

4.5 (சரி)

4.6 (பிழை)

4.7 (சரி)

4.8 (சரி)

4.9 (பிழை)

4.10 (சரி)



# நன்றி



“புத்திதனை தீட்டும் பொக்கிமான நூலை
நீ நித்தமும் கற்றால் வித்தகனாவாய்

றஞ்சித்.ஜீ (களப்பூர் அமரன்)